DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பதனூர் ரகுமான் | Caste: | |
| Father's Name: | திரு. முகமது அபீஷ் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |
| Date | : | | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of June - 2023.

A1 and A3 to A6 Present.

**08.06.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம், பழைய பேருந்து நிலைய, கல்லாங்குத்திற்கு அருகில் தேவேந்திரபுரம் பகுதியில் வசித்து வருகிறேன். நான் மளிகை வியாபாரம் செய்கிறேன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் ஆட்டையாம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார். எனது வீட்டை ஒரு பெண்ணிற்கு வாடகைக்கு கொடுத்திருந்தேன். அந்த வீட்டில் அந்த பெண் அவரது மகனுடன் குடியிருந்தார். அந்த பையன் சேலம் ஐந்துரோட்டிலுள்ள பிளக்ஸ் கடையில் வேலை செய்வதாக சொன்னார்.

நாட்கள் ஆகிவிட்டதாலும், கொரானா தொற்றின் காரணமாக எனக்கு நினைவு மங்கிவிட்டதாலும், அந்த பையனை என்னால் அடையாளம் காட்டமுடியவில்லை. அந்த பையன் மற்றும் அவரது தாயாரின் பெயர்களும் எனக்கு நினைவில்லை. மாத வாடகை ரூ.3000/- போலிசார் என்னை விசாரித்ததிற்கு 2 மாதங்களுக்கு முன்பாக அவர்கள்

எனது வீட்டிற்கு குடி வந்தார்கள். வாடகையை சரியாக கொடுத்தார்கள். அந்த பையன் யாரையே கொலை செய்துவிட்டதாகவும், அதிலிருந்து கிடைத்த பணத்தை கொண்டு எனக்கு வாடகை கொடுத்ததாகவும் ஆய்வாளர் சொல்லி நான் தெரிந்து கொண்டேன். என்னிடம் இருந்து அந்த மாதவாடகை பணம் ரூ.3000/–த்தை அய்வாளர் என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டார். வாடகை பெற்றுக்கொண்டதற்கு நான் ரசீது கொடுத்திருந்தேன். அந்த ரசீது அ.சா.ஆ.17. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>3 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது வீட்டில் வாடகைக்கு குடியிருந்த பெண்மணி அதற்கு முந்தைய இரண்டு மாதங்களுக்கும் வாடகை தொகையை சரியாக கொடுத்தார். அ.சா.ஆ.17 ஆணவமானது ஆய்வாளர் என்னை விசாரித்த தினத்தன்று தான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல அதனை நான் ஏற்கனவே எழுதி வைத்திருந்தேன். அந்த பெண்ணிடம் கொடுப்தற்காக வைத்திருந்தேன். அதனை தான் ஆய்வாளரிடம் கொடுத்தேன்.

அதற்கு முந்தைய மாதத்திற்கு நான் வாடகை ரசீது கொடுக்கவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்த தினத்தன்று தான் அந்த ரசீதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன்.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.